NUS National University of Singapore
**Source:** *Tamil Murasu*, p2
**Date:** 22 September 2015

## தேசிய பல்கலைக்கழக புதிய நிலையத்தில் சிறப்பு சேவைகள்

# பல் சிகிச்சைக்குப் புது வசதி

சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகத்தில் பல் சிகிச்சைக்காக புதிய நிலையம் ஒன்று திறக்கப் படும். அந்நிலையத்தில் பற்களைப் பராமரிப்பதன் தொடர்பில் சிறப்பு வல்லுநர்களின் சேவைகளை மக்கள் பெறலாம்.

கெண்ட் ரிட்ஜில் அமையும் புதிய நிலையம், முற்றிலும் செயல் படும்போது நாளுக்கு 500 பேர் சிகிச்சை பெறலாம். இப்போதைய அளவைவிட இது 40% அதிகம். அந்த நிலையம் 2019ல் கட்டி முடிக்கப்படும். பல் மருத்துவத்தைப் பொறுத்தவரை, அந்நிலையம் சிங் கப்பூரில் சிறப்பு சிகிச்சைகளை வழங்கும் 2வது நிலையமாக இருக்கும் என்று சுகாதார அமைச் சர் கான் கிம் யோங் தெரிவித்தார்.

சிங்கப்பூர் தேசிய பல் பராமரிப்பு மையம் இதில் முதலாவதாகும்.

புதிய நிலையத்துக்கான நிலம் அகழும் நிகழ்ச்சி நேற்று நடந்தது. அதில் அமைச்சர் கலந்துகொண் டார். சிக்கலான உடல் நலப் பிரச் சினைகளை எதிர்நோக்கும் நோயா ளிகள், நடமாட முடியாதவர்கள், சிறப்பு கவனிப்பு தேவைப்படுவோர் எல்லாருக்கும் வேண்டிய புதிய, நவீன வசதிகளுடன் அறைகள் அங்கு இருக்கும். இதற்கு ஏற்ப அறைகள் சிறப்பாக வடிவமைக்கப் பட்டு இருக்கும்.

இப்படி ஆகப் புதிய வசதிகளு டன் இருக்கும் நிலையத்தில், மக் கள் மானியத்துடன் கூடிய கட்ட ணத்துடன் சிறப்பு வல்லுநர்களி டம் சிகிச்சை பெறலாம்.

சிங்கப்பூர் தேசிய பல் மருத்துவ மையம் வழங்கும் சேவைகளுக்கு உறுதுணையாக இவை இருக்கும்.

கெண்ட் ரிட்ஜில் புதிய பல் மருத்துவ நிலையம் அமையும் இட மும் அது இடைவிடாமல், பல துறை சேவைகளை வழங்க வகை செய்வதாக இருக்கும். புதி தாகக் கட்டப்படும் கட்டடத்தில் தேசிய பல்கலைக்கழகத்தின் பல் படிப்புத் துறையும் அமைந்து இருக் கும். அங்கு படிப்போர் எண் ணிக்கை 2021வாக்கில் ஆண் டுக்கு 80ஆக உயரும்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.